# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 689/2025

| | |
|---|---|
| | Prosecution PW 4 |
| Deposition of Witness for | Defence |
| | Court |

| | | |
|---|---|---|
| Name | : | சுப்பிரமணி |
| Father's Name | : | குப்புசாமி |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 15.10.2025

**1, 2 எதிரிகள் நீதிமன்ற காவலிலிருந்து காணொலி வாயிலாக ஆஜர்படுத்தப்பட்டனர்.**

**முதல் விசாரணை**

நான் திருவள்ளுவர் நகர், 6 வது தெருவில் குடியிருந்து பஸ்வபாடி நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது. என்னுடன் குமரேசன் என்பவர் கையொப்பம் செய்தார். கடந்த 31.03.2025 ம் தேதி காலை 07.00 மணியளவில் ரவி வீட்டில் நடந்த திருட்டு சம்மந்தமாக சம்மந்தமாக கருர் நகர போலிசார் சம்பவ இடம் வந்து விசாரணை செய்து சம்பவ இடத்தைப் பார்வையிட்டு வரைபடம் வரைந்தனர். அதற்காக சம்பவ இடத்தில் நானும், குமரேசனும் பார்வை மகசரில் கையொப்பம் செய்து கொடுத்தோம். **அந்த பார்வை மகசர் அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)

அ.சா.1 புகார்தாரர் ரவி எனக்கு 20 வருடங்களாக பழக்கம் உள்ளது. அ.சா.1 புகார் கொடுக்க செல்லும்போது நானும் உடனிருந்தேன் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் வைத்து சாட்சி கையொப்பம் செய்தேன். நான் ஒரு கையொப்பம்தான் போட்டேன். ரவி வீட்டிற்கு அருகில் எஸ்கேடி திருமண மஹால், ராஜா திருமண மண்டபம் உள்ளது என்றாலும், அதில் கண்காணிப்பு கேமராக்கள் பொறுத்தப்பட்டுள்ளது என்றாலும் சரிதான். ரவி வீட்டிற்கு அருகில் மக்கள் நடமாட்டம் அதிகம் மற்றும் வீடுகள் நெருக்கமாக இருக்கும் என்றால் சரிதான். நான் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 தெரிந்தவர் என்பதால் அருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்./-எஸ்.பி.பரத் குமார்
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**